தொகுதி 4

# சமூகவியல்

பயிற்றி 1

கற்றல் தரம்: 1.7.9

**தலைப்பிற்கு ஏற்ப படங்களைப் பார்த்து கலந்துரையாடியப் பின் வாக்கியங்களில் விடுபட்ட இடங்களில் ஏற்புடைய சொற்றொடரைக் கொண்டு நிறைவு செய்க.**

| | |
|---|---|
| உணவிலேயே | இரத்தத்தைப் |
| ஆரோக்கியமான | உடலில் |
| தானமாக | அணுவும் |



இரத்த தானம் என்பது ஒருவர் தனது ________________ பிறருக்குப் பயன்படுத்திக் கொள்ளும் மனப்பான்மையுடன் ________________ வழங்குவது ஆகும். ஓர் ________________ மனிதனின் உடலில் ஐந்து முதல் ஆறு லிட்டர் இரத்தம் உள்ளது. இரத்த தானம் செய்பவர் ஒரு நேரத்தில் 200, 300 மி.லி இரத்தம் வரை கொடுக்கலாம். அவ்வாறு கொடுத்த இரத்தத்தின் அளவு இரண்டே வாரங்களில் நாம் உண்ணும் சாதாரண ________________ மீண்டும் உற்பத்தியாகிவிடும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறை எந்த வித பாதிப்பும் இன்றி இரத்த தானம் செய்யலாம். உடலில் உள்ள ஒவ்வொரு இரத்த ________________ மூன்று மாதக் காலத்தில் தானாகவே அழிந்து மீண்டும் உற்பத்தியாகிறது. இரத்த அணு உற்பத்தி என்பது நம் ________________ எப்போதும் நடந்து கொண்டிருக்கும் பணி. எனவே இரத்த தானம் செய்வதால் உடலுக்குப் பாதிப்போ பலவீனமோ ஏற்பட வாய்ப்பில்லை.

Scanned with CamScanner
LIVEWORKSHEETS